RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s222611

# ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள்

ச. சுமித்திரா தேவி [அ, *], ச. இராமமூர்த்தி [அ]

[அ] தமிழ்த்துறை, புனித ஜஸ்டின் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சோழபுரம், சிவகங்கை-630557, தமிழ்நாடு, இந்தியா

# Gandhian Thoughts in Poems of Erode Tamilanpan

S. Sumitra Devi [a, *], S. Ramamurthy [a]

[a] Department of Tamil, St. Justin Arts and Science College for Women, Sholavaram, Sivagangai-630557, Tamil Nadu, India

* Corresponding Author: sumitradevist@gmail.com

Received: 17-09-2022
Revised: 05-11-2022
Accepted: 14-11-2022
Published: 05-12-2022

## ABSTRACT

Gandhiji proved in his lifetime that through non-violence, one can overcome great injustice and he proved it in the Indian war of Independence. Gandhianism is not only what Gandhi said and did. Modernity developed throughout the world over the centuries and Ghandhianism integrated in political, economic and ecological thoughts. Gandhi said that his first great realization was that truth has many faces. There can be no single solution and no single answer to any issue. Insisting on single truth is called Anti-Ghandhianism. True solutions can only exist at the common ground where truths can be negotiated and reconciled, so Gandhianism always emphasizes dialogue. It seeks to observe the other side and move towards a possible compromise. Truth is not singular it is plural. Erode Tamilanpan has a unique place among the other poets. The purpose of this article is to study Gandhianism through his poetry.

**Keywords:** Tamilanpan, Ghandhianism, Anti-Ghandhianism, Ecological thoughts

## முன்னுரை

"அகிம்சை" எனும் ஆயுதத்தைக் கையிலெடுத்து மாபெரும் அநீதியையும் வெல்ல முடியும் என்று தன் வாழ்நாளிலேயே இந்திய விடுதலைப் போரின் மூலம் நிருபித்துக் காட்டியவர் அண்ணல்காந்தி. காந்தியம் என்பது காந்தி சொன்னவையும் செய்தவையும் மட்டும் அல்ல. காந்தியில் தொடங்கி சென்ற நூற்றாண்டுகளில் உலகமெங்கும் உருவான நவீன அரசியல் பொருளியல், சூழலியல் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்தே காந்திய சிந்தனையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## காந்தியம் என்பதன் விளக்கம்

உண்மைக்குப் பல முகங்கள் உண்டு என்பதைத் தன் முதல் பெரும் அறிதலாக முன்வைக்கிறார் காந்தி. எந்த ஒரு விசயத்துக்கும் ஒரே தீர்வும் ஒரே பதிலும் இருக்க முடியாது. ஒற்றை உண்மையை வலியுறுத்தக்கூடிய அதுவும் காந்தியக்கு எதிரானதே. உண்மைகள் ஒன்றுடன் ஒன்று உரையாடி சமரசமடைந்து கண்டடையும் பொதுபுள்ளியிலேயே சரியான தீர்வுகள் இருக்க முடியும். ஆகவே காந்தியம் எப்போதும் உரையாடலை வலியுறுத்துகிறது. மாற்றுத்தரப்பை மனம்திறந்து கவனிக்கவும், சாத்தியமான சமரசத்தை நோக்கிச் செல்லவும் அது முயல்கிறது.

ஒன்றே உண்மை என்பதல்ல. பன்மையிலேயே உண்மை உள்ளது என்பதே காந்தியம். இவ்வாறு வாழும் கவிஞர்களில் தனக்கென்று ஒருதனி இடத்தைப் பிடித்தவர் ஈரோடு தமிழன்பன்> நடைமுறையில் அவருடைய கவிதையின் மூலமாகக் காந்தியத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அகிம்சை

அகிம்சை என்பது கொல்லாமை மட்டுமன்று. மனத்தில் கூட மற்றவர்க்குத் தீமை எண்ணாத நிலைமே அகிம்சை. எந்த உயரினத்துக்கும் துன்பம் செய்யாமல் இருக்கும் இன்னா செய்யாமைக் கோட்பாட்டை, அகிம்சை என்னும் பெயரால் கடைபிடித்துக் கொண்டு தற்காலத்தில் வாழ்ந்து காட்டியவர் காந்தியடிகள். தன்னைச் சுட்டுக் கொன்ற கோட்சேயைக் கூட மன்னித்து விடும்படி கூறியது காந்தியடிகளின் அகிம்சைக் கோட்பாடு.

“ஆட்டுப்பால் வார்த்த

அக்கினிக் குண்டத்தில்

அகிம்சை புகைகிறது.” (Erode Tamilanban, 2014)

“தீவுகள் கரையேறுகின்றன" என்ற கவிதைத் தொகுப்பில் “வேள்விக் கண்டம்" என்ற கவிதைத் தலைப்பில் உதரவெறி கொண்ட வெறிநாய்களை இந்த அக்கினியில் ஆகுதியாக்கினால் தவம் பலிக்கும் என்று வன்முறையை எதிர்த்து அகிம்சைக் கவிதையின் இறுதி வரிகள் வலியுறுத்துகின்றன என்கிறர் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

"அகிம்மை என்பது வெறும் தத்துவார்த்தக் கோட்பாடுஅல்ல, அது ஒரு விதி அவரது ஜீவியத்தின் மூச்சு, அது அறிவார்ந்த வஸ்து அல்ல மனதுடன் அது தொடர்புடையது

அகிம்சை என்பது தீமையை வெறுத்து, தீயவரை வெறுக்காத மாண்பினைக் கொண்டது. உடலாலும், மனதாலும் பிற உயிர்களை இம்சிக்காததே உண்மையான அகிம்சையாகும்.

“அக்னி என்ற கவிதையில் நல்ல எண்ணம் தேடினால் நன்மை கிடைக்கும். தீயவை தேடினால் தீமையே மிஞ்சும் என்ற பொருள்பட

"தீயை அணைத்திட

தெய்வத்தால் ஆகாது

அக்னி அழித்திட

அரணாலும் ஆகாது

அக்னிக்குப் பெற்றோர்

அரணிக்கும் அப்பால்

பூட்டைத் திறந்திட்ட

விரல்களுக்குப்பால்

நன்மையை நாடினால் தீமையும் உண்டு". (Pichchamoorththi, 2018)

என்று "நெருப்பு" இவ்வுலகையே அழிக்கும் தன்மை பெற்றது. ஆக்கலும் அழித்தலும் வல்ல தன்மை கொண்ட "அக்னி" அகிம்சை என்ற கோட்பாட்டிற்குள் இடம் பெறாது இவ்வாறாக அகிம்சைக் கோட்பாடு உள்ளது என்றும் ந.பிச்சைமூர்த்தி கவிதைகளில் காணமுடிகின்றது.

அன்பினால் எந்தவகையான துன்பங்கள் வந்தாலும் அவை நீங்கும் என்பது திண்ணமாகும். மேலும் பூக்கரி பேசுவதாக

"அன்பும் அகிம்சையும்

விற்று வந்தேன் ஆதிமுதல்

பூக்காரி பூவைப் போல்

கண்ணெடுப்பார் யாருமில்லை" (Pichchamoorththi, 2018)

ந.பிச்சைமூர்த்தி அவர்கள் அன்பை மையப்படுத்தி கூறுகின்றார். அன்பை அடிப்படையான கருவியாகக் கொண்டதே அகிம்சை என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும் செம்மையும், சீர்மையும் கூடிய நல்லியல்புகள் மக்களிடம் ஊற்றெடுக்க அன்பு என்பது அமைதியின் ஆயுதமாகக் கருதப்பட வேண்டும் என்பதே காந்தியடிகளின் எண்ணமாகும்.

## கொல்லாமை

கொல்லாமை சமண சமயத்தவரின் தலையான அறம் ஆகும். எந்த உயிரையும் கொல்லாமை, புலால் உண்ணாமை, அகிம்சை சீவகாருண்யம் என்பனவையாகும்.

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்

பிறவினை எல்லாந் தரும்"

என்கிறது திருக்குறள், அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும். கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளக்கும் (Varadarajan, 2014).

கொல்லாமை நன்று கொலைத்து எழுத்திணைக்

கல்லாமை தீது கதம்தீது நல்லார்

மொழியாமை முன்னே, முழுதும் கிளைஞர்

பழியாமை பல்லார் பதி"

ஓர் உயிரைக் கொல்லாதிருப்பது மிகவும் நல்ல குணம். கொல்லாமை நன்று, கொலையும் கல்லாமையும், சினமும் தீது, பழியாமை தலைவனாம் தகுதி தரும் என்பது சிறுபஞ்சமூலத்தின் பாடலின் வழி அறிய முடிகிறது (Manikkavasagan, 2012).

## தியாகம்

தியாகம் எனில் துறத்தல் அல்லது கைவிட்டு விடுதல் என்று பொருள்படும். நாடு. இனம், சமூகம், மொழி மற்றும் கலாச்சாரம் போன்றவைகளின் உரிமைக்கான போராட்டத்தில் தன் உடல், பொருள் உயிர் ஆகியவைகளை ஒருவன் துறத்தலே தியாகம் ஆகும்.

"தொண்டே மோகம்

தொழிலே யாகம்

தன்னல மறுப்பே

தாயக யாகம்"

என்று நம் நாட்டிற்காக வேள்விகள் செய்ய வேண்டும். நாட்டின் மீது மக்களுக்கு உண்மையான பற்று இருந்தால் தான் அத்தனை துயரங்கள் வந்தாலும் அதை எளிதாக மாற்றிட முடியும். அதுவே நமது தியாகமாகும் என்று கவிஞர் சுட்டிக் காட்டியுள்ளர் (Erode Tamilanban, 2014).

## கல்வி

"புத்தகம் இல்லாத வீடு

ஜன்னல் இல்லாத அறை போன்றது

எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ

அந்த வீட்டில் ஆண்மா இருக்கிறது. "

"எது சுதந்திரம் அளிக்குமோ அததான் கல்வி" என்கிறார் காந்தியடிகன்.

கல்வியை மையமாக வைத்தே வாழ்க்கையின் அடிப்படைகளை உணர கல்விமுறை நாட்டிற்கு நாடு வேறுபடும். ஆங்கிலேயர்கள் வகுத்த கல்விமுறை நம் நாட்டிற்குப் பொருந்தாது, என்பது காந்தியடிகளின் எண்ணம், கல்விக் கூடங்கள் எல்லாம் விற்பனைக் கூடங்களாக மாறிவிட்டன. கல்விக் கூடங்களில் ஒலிக்கும் மணியோசை பற்றிக் கூற வந்த கவிஞர் "மின்மினிக் கோடு" என்ற கவிதைத் தொகுப்பில்

"பள்ளிக்கூட

மணியோசையில்

கல்விக்கும்

காது செவிடாகிவிட்டது"

என்கிறார் கவிஞர் (Erode Tamilanban, 2014).

மனனம் செய்து ஒப்பித்தல் மட்டுமே கல்வி அல்ல. மனனம் செய்வதோடு முடிந்து விடுவதில்லை கல்வி, அதை வாழ்க்கைக்கு உரியதாக உணர்வுப் பூர்வமாகக் கற்றல் மட்டுமே சிறந்த கல்வியாகும். இவ்வாறாக் கல்வி என்பது மாணவர்களுக்குக் கற்றுத் தருவது மட்டுமன்று. அதன் வழி நின்று வாழ வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும் என்கிறார் கவிஞர் தமிழன்பன்.

"எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்

கண் என்ப வாழும் உயிர்க்கு".

## ஆன்மீகம்

கடவுள் மீது பக்தி கொண்டவர்கள் யாவரும் கருணை உள்ளம் கொண்டவர்களாக இருத்தல் அவசியம். அதற்குத் தக்கச் சான்றாக வள்ளலாரைக் கூறலாம்.

"வானமும் பூமியும் பெற்றெடுத்த வள்ளலார். காற்றும்

கனலும் தாலாட்டி வளர்த்த வள்ளலார்"

என்று தமிழன்பன் வள்ளலாரைப் புகழ்கின்றார் (Erode Tamilanban, 2014). ஏழைக்களுக்காக இரக்கம் காட்டும் நபர்களிடம் இறைவன் நடம்புரிகின்றான் என்பதில் நம்பிக்கை கொண்டவர் வள்ளலார் சன்மார்க்க நெறி சர்ந்தவர் மதம் சாராதவர் என்பதை "வார்த்தைகள் கேட்ட வரம் கவிதை தொகுப்பில் "வடலூரார் என்னும் வற்றாத மக்கள் நேயம்" என்ற கவிதையில்

"அருட் தந்தை இராமலிங்கர்

அனைத்துயிரும்

கடைத் தேற வந்த

சன்மார்க்கப் பாதிரியார்".

என்று கிறித்துவ அருட்தந்தையாக வள்ளலாரைக் குறிப்பிடுகின்றார். அனைத்து உயிர்களையும் காத்து நிற்கும் இறைவன் கருணை நிறைந்த உள்ளங்களில் கடவுளாகத் தோன்றுகின்றான்.

## சத்தியாகிரகம்

சத்தியத்தைக் கடைபிடித்தல் என்பது எளிமையான செயல் அன்று அதனால் ஏற்படும் இன்னல்களை எதிர்கொள்ள உறுதி பூண்ட நெஞ்சம் இருந்தால் மட்டும் தான் சாத்தியமாகும். "பூப்போலத் தெம்மாங்கு" என்ற கவிதையில்

“நம்பிக்கைக் கிடவாவோம்!

நாணயத்தை விடமாட்டோம்!

வம்பு வழக்கென்று தினம்

வாழ்வை நடத்தோம்!

வாழும் முறை தெரிஞ்சதனால்

ஊழல் தடுப்போம்!”

என்று அநீதியை எதிர்க்கும் ஆற்றல் மிக்க சக்தியாக விளங்கம் சத்தியாகிரகம் பற்றிய கருத்தைத் தமிழன்பன் கவிதையின் வழி அறியலாம் (Erode Tamilanban, 2014).

சத்தியாகிரகம் என்பது வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்கும் என்ற பொருள்பட

"சத்தியாகிரகம் என்பது அகிம்சை வழியால்

யுத்தம் நடத்தும் முறையாகும்”

என்று நிர்மல்குமார் போஸ் காந்தியடிகளின் கூற்றின் வழி உணர்த்துகின்றார். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் காந்தியடிகள், வன்முறைக்கு எதிராக செயல்பட்ட மிதவாதி, புரட்சியால் எதையும் வெல்ல முடியாது வன்முறை என்பது நாட்டை பாழ்படுத்தும் என்பதில் ஆழ்ந்த சிந்தனை கொண்டவர்.

“வான் கருவில் இருள்மலைகள்

வரிசையாய் விம்பி நிற்க

இருள் மலையின் மைக்குகையில்

ஒளிமாடு ஓலமிட

கதிர்கன்றின் சோக ஒலி

கடுஞ்சிறையில் கம்ம”

"இருளும் ஒளியும்" என்ற கவிதையில் சத்தியத்திற்காகப் போரிடும் இருள் ஒளியின் போராட்டாத்தை கவிஞர் ந.பிச்சைமூர்த்தியின் கவிதையின் வழி எடுத்துக்காட்டுகின்றார்.

## தமிழன்பன் கவிதைகளில் சமதர்மம்

இன்றைய சமூகத்தில் சமதர்மநிலை எவ்வாறுeeeve நிலவுகிறது. படிக்காத ஒரு மனிதன் எவ்வாறு இச்சமூத்தில். நடத்தப்படுகிறான், இத்தனை ஆண்டுகள் சுதந்திரம் கிடைத்திரம் இச்சமூத்தில் மனிதனுக்குச் சுதந்திரம் கிடைத்ததா? என்பதைப் பற்றி தமிழன்பன் கவிதைகளில் காணலாம்.

“பகிர்ந்து கொள்ளாமல்

பகல்கள்

சமமாய்க் கிடைப்பது போல்

வாழ்க்கை கிடைக்கட்டும்"

சமதர்மம் என்பது காந்தியச்சாரமாகும் (Erode Tamilanban, 2014). பொதுவுடைமை என்பது நடைமுறையில் உள்ள சாதிவேறுபாடு, ஆண் - பெண் பாகுபாடு இன்றி ©அனைத்தும் சமம் என்பதைச் சமதர்மம் என்கிறோம். காந்தியடிகள் சமதர்மத்தை ஒவ்வொரு மக்களும் ஒவ்வொரு நாடும் பின்பற்ற வேண்டும் என்று கூறுகின்றார்.

"பங்கீட்டுக் கடை என்ன

சல்லடையா?

முறமா

நெல் மிஷினா

பலகைக் காரியா?"

பங்கீட்டுக் கடை என்பது தேவையற்றதைப் புடைத்து எடுக்கும் பொருளா? எல்லாருக்கும் எல்லாப் பொருட்களும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதைக் காந்தியம் வழிக் எடுத்துரைக்கிறார் ந.பிச்சைமூர்த்தி

"எங்கள் உழவர்கள் போராடுகின்றார்

எங்கள் தொழிலாளர் போராடுகின்றார்

எங்கள் பெண்கள் போராடுகின்றார்

எங்கள் மக்கள் போராடுகின்றார்"

என்னும் கவிதையில் உழவர்கள், தொழிலாளர்கள், பெண்கள். மக்கள் என ஒட்டு மொத்த உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரையும் எங்கள் என்ற சமதர்மச் சொல்லால் ஒன்றிணைக்கின்றார் கவிஞர் இன்குலாப்.

## கதர் ஆடை

"கதர்" என்றால் அரபியில் "கௌரவம்" என்று அர்த்தம். காந்தியடிகள் தமது உயிர் மூச்சாக கதர் ஆடைba கருதினார்,

பொருளாதாரத்தில் சுதேசியம், உணவில் சுதேசியம், அதுபோல் உடையில் சுதேசியம், என்பது தான் அவர் அன்று எடுத்த முடிவுக்கு முக்கிய காரணம். சொல், செயல், சிந்தனை ஆகிய அனைத்தும் ஒருங்கே செயல்பட்டு. உள்ளும் புறமும் ஒன்றாய், எளிமையோடும் உயர்ந்த சிந்தனையோடும் வாழ்வதற்கு காந்தி எடுத்த உண்ணத முடிவுதான் ஆடையில் புரட்சி ஏற்பட்டதன் காரணமாகும்,

"நாடெல்லாம்

தூங்க

நடுவான நிலாத்தூங்கப்

பாரெல்லாம்

தூங்கும் வேளையிலும்

எம்மூர்

ஏழைத் தாய்மார்களின்

இராட்டை தூங்காது".

என்னும் கவிதையில் இராட்டை நூற்கும் பெண்களின் நிலையை எடுத்துக்கூறி காந்தியடிகளின் கதர் ஆடை பற்றிய காந்தியச் சிந்தனையை முன்மொழிந்துள்ளார் கவிஞர் "தறியை கவிதை நெய்கிறது" என்பதன் கவிஞர் பதிவு செய்துள்ளார்.

"கரிய மலையில் சரிவில்

வெள்ளை

அருவியாக

அந்த மேல் துண்டு

கதர் பெற்ற கவுரம்"

என்னும் கவிதையில் "காமராசர்" என்ற கவிதைத் தொகுப்பில் மலையின் சரிவில் இருந்து அருவிபோல் வெண்மையான துண்டு மேலோங்கி நிற்பதுபோல் கதருக்கும் கவுரவம் கிடைத்தது என்கிறார் கவிஞர் தமிழன்பன் (Erode Tamilanban, 2014)

## தமிழன்பன் கவிதைகளில் பெண்ணியம்

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று போற்றப்படும் பெண்கள் மானுடத்தின் உயர்வான இடத்தினைப் பெற்று விளங்குபவர்கள். பெண்களைக் காட்டிலும் மென்மையாள, மேன்மையான படைப்பு வேறெதுவுமில்லை என்பது காந்தியடிகளின் கருத்தாகும்.

"மானெண சொன்னது போதும்

மயிலெனச் சொன்னது போதும்

மனிதனைப் போலோரீ படைப்பு - அவள்

மனுசி மனுசி மனுசி தான"

என்று பெண்களைப் பிற உயிரினங்களோடு ஒப்புமைப்படுத்திப் பாராட்டி அவளை அடிமைப்படுத்தியது போதும். அவளும் ஒரு மனிதப் படைப்புத்தான் என்பதை ஆண்கள் உணர வேண்டும் அவளாலும் சாதிக்க முடியும். எனவே சாத்திரங்கள் பேசி அவளை ஒதுக்கிட வேண்டாம் என்பது கவிஞரின் எண்ணப் போக்காகும்.

பெண்ககளின் மாற்றத்தினை முரண் என்ற கவிதையில்

"மகப்பேறு நிலையத்தில்

உம்மை எல்லாம் கண்டு

கைகூப்பி வந்த பின்னர்

குதி உயர் காலணி"

பெண்களைப் கவர்ச்சி பொருளாகப் பார்க்கும் ஆண்கள் பொதுவுடைமை பேசும் காலத்தை விட்டு சற்றும் மாறவில்yலை சமுதாயத்தில் பெண்கள் கீழானவர்கள் என்றும், தனது பங்கை ஆற்ற இயலாதவர்கள் என்ற எண்ணமும் பரவலாக இன்றளவும் இருந்து வருகிறது என்பதைக் கவிஞரின் வரிகள் குறிப்பிடுகின்றன.

"கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம் காமுற்ற

பெண்ணுக்கு அணிகண் நாணுடைமை - நண்ணும்

மறுமைக்கு அணிகல கல்வி இம்மூன்றும்

குறியுடையார் கண்ணே உள"

கண்களுக்கு அழகு என்பது கனிவான பார்வை கணவனால் விரும்பப்படுகின்ற பெண்ணுக்கு அழகாவது நாணம், மறுபிறப்புக்கு அழகாவது கல்வி கேள்விகளின் சிறந்திருத்தல். இம்மூன்றும் ஒரு குறிக்கோளை வாழ்வில் கொண்டுள்ளவர்களிடத்தில் மட்டுமே இருக்கும் என்கிறது திரிகடுகம்.

## காந்தியத்தின் கண்ணாடி

"அந்தக் கண்ணாடியைப்

போட்டுக் கொண்டு

பார்த்தால் கோடி கோடி குடிசைகளில்

இளைத்து நொந்த பாரதமாதா

தெரிகிறார்"

ஏழைப் பெண்கள் சுதந்திரம் பெற்ற பிறகும் கூட மகிழ்வான வாழ்வு வாழவில்லை என்கிறது காந்தியடிகளின் மூக்குக் கண்ணாடி.

காந்தியன் மூக்குக் கண்ணாடியைப் பாரத மாதா அணிந்து கொண்டு தேசத்தில் உள்ள மக்களைத் தேடினாள். அத்தனை பேடும் அரசியல்வாதிகளாக முகமூடியால் தெரிகிறது. சுதந்திர நாடு என்னுடையது என்ற எண்ணம் ஒவ்வொருக்குள்ளும் ஏற்பட வேண்டும் என்பதைத் தமிழன்பன் கவிதைகளின் வாயிலாக அறிய முடிகிறது.

## முடிவுரை

ஈரோடு தமிழன்பன் வன்முறை தவிர்த்து அகிம்சை வழியில் வாழ வலியுறுத்துகிறார். கல்வி அனைவருக்கும் சமம் என்பதைக் காந்தியின் வழி எடுத்துரைத்திருக்கிறார். சமதர்மத்தை ஒவ்வொடு நாடும் மக்களும் பின்பற்ற வேண்டும் என்று அழகுற விராத்தியுள்ளார், பருவ வயதிலே விதவைநிலை எட்டிய பெண்ணை இராட்டையின் வாயிலாக எடுத்தியம்பியுள்ளர். ஆசிரியின் சமுதாயப் பார்வையினை இழையோடச் செய்துள்ளார்.

## References

Erode Tamilanban, (2014) Erode Tamilanban Kavithaigal, Nilacharal Ltd, London, UK

Manikkavasagan, (2012) Sirupanjamoolam Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India

Pichchamoorththi, N. (2018) Pichchamoorthy Kavithaigal, Santhiya pathipagam, Chennai, India

Varadarajan, M. (2014) Thirukural, Paari Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License